**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி**
**முன்னிலை:திரு.N.விஸ்வநாத், B.A.,B.L.,M.B.A.,L.L.M.**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கடலாடி.**

**2024 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 24 ம் நாள் புதன்கிழமை**

**I.A.No.99/2020**
**in**
**O.S.No.94/2019**

1. வள்ளிமயில்
2. வில்வக்கனி ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. இராமலிங்கம்
2. பொன்னையா
3. காளியம்மாள்
4. (மைனர்) மணிகண்ட பூபதி
(வைஷ 4 ம் பிரதிவாதிக்கு அவரது
தாயாரான 3 ம் பிரதிவாதி
கார்டியன் ஸ்தானத்தில்) ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
5. பாக்கியலெட்சுமி
6. வினோத்குமார்
7. விவேக் ... எதிர்மனுதாரர்கள்/உத்தேசிக்கப்பட்ட 5 முதல் 7 பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 21.12.2023 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.வேலுச்சாமி அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பில் கடந்த 16.10.2020ம் தேதியன்று இறந்துபோன 2ம் பிரதிவாதி பொன்னையாவின் வாரிசுகளை 5 முதல் 7 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை மேல் நடத்த உத்தரவிடக்கோரி கட்டளை 22 விதி 4ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

மனுதாரர் அசல் வழக்கில் 2ம் வாதி என்றும், கடந்த 16.10.2020ம் தேதி 2ம் பிரதிவாதி பொன்னையா காலமாகி விட்டதாகவும், மேற்படியாருக்கு இத்துடன் தாக்கல் செய்த மனுவில் கண்ட வாரிசுகள் தவிர வேறு வாரிசுகள் யாரும் கிடையாது என்றும், வாரிசு சேர்க்காவிட்டால் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்பதால் 2ம் பிரதிவாதி பொன்னையாவின் வாரிசுகளாக 5 முதல் 7 உத்தேச பிரதிவாதிகளை சேர்த்து வழக்கை நடத்த உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுவினை செலவுத்தொகையுடன் அனுமதிக்கக்கோரி மேற்குறிப்பு செய்துள்ளனர்.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

இம்மனுதாரர் அசல் வழக்கில் 2ம் வாதி. அசல் வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் 2ம் பிரதிவாதி இறந்து விட்டதாகவும், அவரது வாரிசுதாரர்களை 5 முதல் 7 பிரதிவாதிகளாக சேர்த்து அசல் வழக்கினை மேற்கொண்டு நடத்திட உத்தரவிடக்கோரியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிக்கக்கோரி மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் இறந்துபோன நபரின் வாரிசுதாரர்களை தரப்பினர்களாக சேர்த்து வழக்கினை மேற்கொண்டு நடத்திட வேண்டியது அவசியமானதாகவும், நியாயமானதாகவும் உள்ளது. எனவே மனுதாரர் கோரியுள்ள பரிகாரமானது மனுதாரருக்கு கிடைக்கக்கூடியது என தீர்மானிக்கப்பட்டு அதனடிப்படையில் இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 24.01.2024 இன்று அவையறிய பகரப்பட்டது.

N VISWANATH
Digitally signed by N VISWANATH
Date: 2024.01.24 15:07:07 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

N VISWANATH
Digitally signed by N VISWANATH
Date: 2024.01.24 15:07:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

I.A.No.99/2020
**in**
O.S.No.94/2019

Date: 24.01.2024
IA order